அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 47 - இஸ்லாமிய நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

முழுப் பதிப்புரிமையுடையது

# பரீட்சகர்களுக்கான பொது அறிவுறுத்தல்கள்

## 47 - இஸ்லாமிய நாகரிகம்

1. நீங்கள் பொறுப்பேற்றுள்ள இப்பணி மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒன்றாதலால் மிகப் பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்ற வேண்டியதொன்றாகும்.

2. இப்பணியில் நீங்கள் மிக நேர்மையாக நடக்க வேண்டுமென்பது பரீட்சைகள் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.

3. இப்பணி, மறுமையில் அல்லாஹ்விடத்தில் பதில் சொல்ல வேண்டிய ஒரு செயல் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வது உங்களது செயற்பாடுகளை நேர்மையாக முன்னெடுத்துச் செல்வதற்கு நிச்சயம் உதவும்.

4. **புள்ளித்திட்டம்**

   புள்ளித்திட்டம் பரீட்சகர்களிடையே ஒரு முகப்பாட்டை ஏற்படுத்துமாதலால், மாணவர்கள் நியாயமான முறையில் மதிப்பீடு செய்யப்படுவதற்காக, புள்ளித்திட்டத்தை முழுமையாகப் பின்பற்றுவது மிக அவசியமாகும்.

5. **அறிவுறுத்தல்கள்**

   பரீட்சைகள் திணைக்களம் முன்வைத்துள்ள அனைத்து அறிவுறுத்தல்களையும் பரீட்சகர்கள் முழுமையாகப் பின்பற்றுதல் அவசியமாகும்.

6. **விடைத்தாள் மதிப்பீடு**

   விடைத்தாள்களை மதிப்பிடும் பணியை ஆரம்பிக்க முன் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடை யாது என்பதை புள்ளித்திட்டத்தை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் பிரதம கட்டுப்பாட்டாளர்/ பிரதம பரீட்சகரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. புள்ளி வழங்கும் ஒழுங்கு.

   வினாப்பத்திரம் 01

   இதில் 50 வினாக்கள் உண்டு. ஒவ்வொரு வினாவுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 வினாக்களுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

   வினாப்பத்திரம் 02

   இதில் பகுதி I பகுதி II என இரு பகுதிகள் உள்ளன. பகுதி I ஒவ்வொன்றும் ஐந்து பிரிவுகளைக் கொண்ட மூன்று வினாக்களை உள்ளடக்கியுள்ளது. பகுதி II ஒவ்வொன்றும் இரண்டு பிரிவுகளைக் கொண்ட ஐந்து வினாக்களை உள்ளடக்கியுள்ளது. பகுதி I ல் இரண்டு வினாக்களுக்கும், பகுதி II ல் மூன்று வினாக்களுக்கும் பரீட்சார்த்திகள் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் ஒழுங்கு | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் 01<br>50 வினாக்கள்,<br>தலா 02 புள்ளிகள் | 50 x 02 | 100 |
| வினாப்பத்திரம் 02<br>பகுதி I 02 வினாக்கள்<br>பகுதி II 03 வினாக்கள்<br>தலா 20 புள்ளிகள் | 02 x 20<br>03 x 20 | 40<br>60 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ 4/5

..................................................................

..................................................................

(ii) ............................................................ ✓ 3/5

..................................................................

..................................................................

(iii) ............................................................ ✓ 3/5

..................................................................

..................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த(உ/த) தர் மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப்பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

47 T I

පැය දෙකයි
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களுள் 'ஆலமிய்யா' எனப்படுவது
(1) முழுமையானது.
(2) தெய்வீகத் தன்மை வாய்ந்தது.
(3) சர்வதேச மயமானது.
(4) நடுநிலையானது.
(5) நெகிழ்வுத் தன்மை கொண்டது.

**2.** 'நாங்கள் ஜாஹிலியத்தில் இருந்தோம்' எனும் கருத்துடன் தொடர்புறும் ஸஹாபியும் மன்னரும் முறையே
(1) ஜஃபர் இப்னு அபீதாலிப் (ரழி) - மன்னர் நஜ்ஜாஷி ஆவர்.
(2) அபூஹுரைரா (ரழி) - மன்னர் ஹிர்கல் ஆவர்.
(3) அம்ர் இப்னு ஆஸ் (ரழி) - மன்னர் ஹுர்முஸான் ஆவர்.
(4) ஜஃபர் இப்னு அபீ தாலிப் (ரழி) - மன்னர் ஹிர்கல் ஆவர்.
(5) அபூசுஃப்யான் (ரழி) - மன்னர் நஜ்ஜாஷி ஆவர்.

**3.** அப்பாஸிய கலீபா மன்சூர் அவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட நகரம்
(1) மதீனா முனவ்வரா
(2) மதீனதுஸ்ஸலாம்
(3) கொரடோவா
(4) மக்கா
(5) ஹழரமௌத்

**4.** இறுதி நபித்துவம் தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டோர்
(1) அஷ்அரியாக்கள்
(2) முஃதஸிலாக்கள்
(3) காதியானிகள்
(4) காரிஜிக்கள்
(5) கதரியாக்கள்

**5.** தௌஹீத், ரிஸாலத், மஆத் என்பன
(1) இஸ்லாமிய கடமைகளாகும்.
(2) இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளாகும்.
(3) ஈமானின் பிரிவுகளாகும்.
(4) இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களாகும்.
(5) சூபியாக்களின் சிந்தனைகளாகும்.

**6.** துணை மூலாதாரங்களுள் உர்ப் ஐ நடைமுறைப்படுத்துவதற்கான நிபந்தனைகளுள் ஒன்று
(1) சமூகத்தில் கணிசமானோரினால் பின்பற்றப்படல் வேண்டும்.
(2) ஷரீஆவின் தெளிவான சட்ட வசனம் ஒன்றுக்கு முரண்பட்டிருத்தல் வேண்டும்.
(3) நபிகளாரின் காலத்தில் நடைமுறையில் இருந்திருத்தல் வேண்டும்.
(4) ஜாஹிலிய்யா சமூகத்தின் நற்பழக்கங்களுள் ஒன்றாக இருந்திருத்தல் வேண்டும்.
(5) முன்னைய சமூகம் ஒன்றின் நடைமுறையில் காணப்பட்டிருத்தல் வேண்டும்.

**7.** வஹி எழுதும் குழுவில் உள்ளடக்கப்பட்டவர்களை மாத்திரம் கொண்ட தொகுதி யாது?
(1) அலி இப்னு அபீதாலிப் (ரழி), முஆவியா இப்னு அபீசுப்யான்(ரழி), உபை இப்னு கஃப் (ரழி)
(2) உமர் இப்னு கத்தாப் (ரழி), அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி), முஆத் இப்னு ஜபல் (ரழி)
(3) ஸைத் இப்னு ஸாபித் (ரழி), உஸ்மான் இப்னு அப்பான் (ரழி), அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)
(4) அம்மார் இப்னு யாஸிர் (ரழி), அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ரழி), அபூ உபைதா அல் ஜர்ராஹ் (ரழி)
(5) அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி), அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி)

**8.** நோய் நிவாரணம் பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
(1) அல் ரஹீக் அல் மக்தூம்
(2) அஷ் ஷிபா
(3) கிதாபுத் திப்
(4) ஸீரா அந்நபவிய்யா
(5) அத்திப்புன் நபவிய்யா

**9.** கலீபா அப்துல் மலிக் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுள் ஒன்று
(1) பைத்துல் முகத்தஸ்
(2) குப்பதுஸ் ஸஹ்ரா
(3) மஸ்ஜித் அந்நபவி
(4) அல்ஹம்ரா மாளிகை
(5) பைத்துல் ஹிக்மா

**10.** ஏகோபித்த கருத்துக்கொள்ளல் எனும் அர்த்தத்தை உள்ளடக்கிய சட்ட மூலாதாரம்
(1) கௌலுஸ் ஸஹாபி
(2) இஜ்திஹாத்
(3) இஸ்திஹ்ஸான்
(4) இஜ்மாஉ
(5) மஸ்லஹா முர்ஸலா

**11.** கலீபா ஹாரூன் அல் ரஷீத் அவர்களின் ஆட்சியின் உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பின்னணியாக செயற்பட்டோர்
(1) பர்மக்கள்
(2) மம்லூக்கியர்
(3) ஸெல்ஜூக்கியர்
(4) பர்பர்கள்
(5) புவைஹிதுகள்

**12.** மகா பராக்கிரமபாகு மன்னர் காலத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளை உள்ளடக்கி தாபிக்கப்பட்ட ஏற்றுமதி வர்த்தகப் பிரிவு
(1) மடிகே பத்த
(2) முகாந்திரம்
(3) லேகம்
(4) அந்தரங்க துர
(5) தவளம

**13.** கி.பி. 12 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் கொழும்பில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம்
(1) புதூஹுல் புல்தான்
(2) தாரீக் தபரி
(3) கொழும்பு சிலாசனம்
(4) அஜாயிபுல் ஹிந்த்
(5) வயம்ப ஸங்காவே ராஜகாரி

**14.** பைஅதுஷ்ஷஜரா என்ற உடன்படிக்கையின் மற்றொரு பெயர்
(1) பைஅதுல் ஹுதைபிய்யா
(2) பைஅதுல் அகபா
(3) பைஅதுர் ரிழ்வான்
(4) பைஅதுல் மீஸாக்
(5) பைஅதுல் கலீபா

**15.** "கருத்து முரண்பாடு என்பது மனிதனுக்கு சௌகரியமாக அமைவதற்கு இயைந்து கொடுக்கக் கூடிய ஒரு கிரியையாகும்" எனும் கருத்தை இமாம் முஸ்தபா அஹ்மத் ஸர்கா (றஹ்) முன்வைத்துள்ளார். இக்கருத்து புலப்படுத்துவது
(1) கருத்து வேறுபாடுகள் தவிர்க்கப்பட வேண்டியதாகும்.
(2) கருத்து வேறுபாடுகள் பிரச்சினைகளுக்கான அடிப்படையாகும்.
(3) விட்டுக்கொடுப்பே சிறந்த வழியாகும்.
(4) கருத்து வேறுபாடுகள் இயைந்து கொடுக்கக் கூடியவையாகும்.
(5) இமாம்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படவில்லை.

**16.** மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு அல் - குர்ஆன் தூண்டுதல் அளித்ததோடு இயற்கை பற்றி சிந்தித்து ஆராயுமாறும் வலியுறுத்துகின்றது எனும் கருத்தை முன்வைத்த மருத்துவத் துறை அறிஞர்
(1) ஹிப்போ கிரட்டீஸ்
(2) ஹாலிக் ஹோக்வெல்
(3) கலென்
(4) பிடியஸ்
(5) வில்லியம் ஹார்வி

**17.** முஸ்லிம்களை நடுநிலை சமூகம் எனக் குறிப்பிட அல் - குர்ஆன் பயன்படுத்தியுள்ள பதப்பிரயோகம்
(1) உம்மதுன் வாஹிதா
(2) ரஹ்மதுன் லில் ஆலமீன்
(3) ரப்புல் ஆலமீன்
(4) உம்மதன் வஸதன்
(5) உம்மஹாதுல் முஃமினீன்

**18.** கலீபா உஸ்மான் (ரழி) அவர்களுடன் தொடர்புடைய மிகச் சரியான கூற்று எது?
(1) குலபாஉர் ராஷிதூன்களுள் குறைந்த காலம் ஆட்சி செய்தவராவார்.
(2) தனக்குப் பின் அலி (ரழி) அவர்களை கிலாபத்துக்கு நியமனம் செய்தவராவார்.
(3) அல் - குர்ஆன் நூலுருப்படுத்த ஆலோசனை வழங்கியவராவார்.
(4) பாரூக் எனும் சிறப்புப் பெயர் பெற்றவராவார்.
(5) பீரு ரூமா எனும் கிணற்றைப் பெற்றுக் கொடுத்தவராவார்.

**19.** சமய, சமூக நல்லிணக்க அடிப்படையில் மஸ்ஜிதுன் நபவியில் வரவேற்கப்பட்டு அங்கு தங்குவதற்கும் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இடமளிக்கப்பட்ட பிரதேசத்தவர்களும் மதத்தவர்களும் முறையே
(1) பாரசீக மஜூஸிகள் ஆவர்
(2) நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்கள் ஆவர்
(3) மதீனா யூதர்கள் ஆவர்
(4) மக்கா முஷ்ரிக்குகள் ஆவர்
(5) அரேபிய ஹனீபகள் ஆவர்

**20.** மன்னர்கள் அன்பளிப்புகளை அனுப்பிவைத்தபோது நபி (ஸல்) அவர்கள் அவற்றை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். அவ்வகையில் எகிப்திலிருந்து அன்பளிப்புகளை அனுப்பிவைத்த மன்னர்
(1) நஜ்ஜாஷி
(2) ஹிர்கல்
(3) ஹிமாயூன்
(4) முகௌகிஸ்
(5) சேரமன் பெருமாள்

**21.** அல் - குர்ஆனை தொகுக்கும் பொறுப்பு தொடர்பாக அபூ பக்கர் (ரழி) அவர்கள் முன்வைத்த மிகச்சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இப்பணியை மேற்கொள்வதற்கு என்னைவிட தகுதியான பலர் இருக்கின்றனர்.
(2) அல் - குர்ஆனை தொகுப்பது எனது கடமையல்ல.
(3) இப்பணியை என்னால் இலகுவாக செய்து முடிக்க முடியும்.
(4) இப்பணியை விட ஒரு மலையை நகர்த்துவது இலகுவாகும்.
(5) இப்பணியை மேற்கொள்ளும் பொறுப்பை உஸ்மான் (ரழி) அவர்களிடம் விட்டுவிடுவோம்.

**22.** இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாட்டில் ஸலம் அடிப்படையில் விற்கப்பட்ட வியாபாரப் பொதிகளை தனது வீட்டுக்கு குறிப்பிட்ட தினத்தில் கையளிக்க வேண்டுமென வாங்கியவர் நிபந்தனையிடுகிறார். இஸ்லாமிய சட்டவாக்கத்தில் இவ்வகையான நிபந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வியாபார முறைமை
(1) இஸ்திஹ்ஸான் ஆகும்.
(2) உர்ப் ஆகும்.
(3) கியாஸ் ஆகும்.
(4) இஜ்மாஃ ஆகும்.
(5) மஸ்லஹா முர்ஸலா ஆகும்.

**23.** 'நீங்கள் வட்டியைச் சாப்பிட வேண்டாம்' எனும் அல் - குர்ஆன் வசனத்திலுள்ள மையக் கருத்தை புலப்படுத்தும் கருத்து
(1) வட்டியுடன் கூடிய உணவு பழக்கவழக்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்பதாகும்.
(2) உணவு, உடை ஆகியவற்றில் வீண் விரயம் தடை செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.
(3) வட்டியை முழு வழியிலும் பயன்படுத்திக்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.
(4) கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது வட்டியை தவிர்த்துக்கொள்ளுமாறு கட்டளையிடுகின்றது என்பதாகும்.
(5) இஸ்லாமிய பொருளியல் கோட்பாட்டுக்கு முரணானதாக வட்டி காணப்படுகின்றது என்பதாகும்.

- பின்வருவோர் இலங்கையின் தேசிய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தோர் ஆவர். இதனை அடிப்படையாகக் கொண்டு 24 தொடக்கம் 26 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - அறிஞர் M. C. சித்திலெப்பை
B - வாப்பிச்சி மரைக்கார்
C - N. D. H. அப்துல் கபூர்
D - கலாநிதி பதியுதீன் மஹ்மூத்
E - A. C. S. ஹமீத்
F - நளீம் ஹாஜியார்
G - கலாநிதி M. I. M. அமீன்

**24.** எழுத்தாக்கம் ஊடாக இலங்கை முஸ்லிம்களின் அறிவியல் துறைக்கு பங்களிப்புச் செய்த இருவரைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.
(1) A, D (2) A, G (3) C, E (4) C, F (5) E, G

**25.** இலங்கை அரசியல் வரலாற்றில் தேசிய கல்வி மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்தவர்களுள் இருவரைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.
(1) A, C (2) B, C (3) B, E (4) D, E (5) D, F

**26.** இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்தவர்களுள் இருவரைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.
(1) A, C (2) A, F (3) B, G (4) C, F (5) D, F

**27.** "நாம் இந்த ஆலயத்தை மனிதர் ஒதுங்கும் தளமாகவும் அபயம் அளிக்கும் தளமாகவும் ஆக்கினோம்" இங்கு குறிப்பிடப்படும் ஆலயமானது
(1) அல் அக்ஸா ஆகும். (2) அல்கிப்லதைன் ஆகும். (3) அந்நமிரா ஆகும்.
(4) அல்குபா ஆகும். (5) கஃபதுல்லாஹ் ஆகும்.

**28.** கலீஃபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள், திறைசேரியிலிருந்து குறிப்பிட்ட பிரிவினர் உதவித்தொகையை நாளாந்தம் பெறலாம் என அறிவிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். அப்பிரிவினரை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு
(1) ஏழைகள், அநாதைகள், கடனாளிகள், திருமணம் முடிக்க வசதியற்றோர்
(2) ஏழைகள், அநாதைகள், கடனாளிகள், வழிப்போக்கர்கள்
(3) ஏழைகள், வயோதிபர்கள், அநாதைகள், கடனாளிகள்
(4) ஏழைகள், விவசாயிகள், கடனாளிகள், திருமணம் முடிக்க வசதியற்றோர்
(5) ஏழைகள், வியாபாரிகள், கடனாளிகள், வழிப்போக்கர்கள்

**29.** "ஜாஹிலிய்யக் காலத்தில் கவிதை இலக்கியம் வளர்ச்சியுற்றது போல் உரைநடை இலக்கியம் வளர்ச்சியுறவில்லை" இங்கு கவிதை இலக்கியத்தைக் குறிக்கப் பயன்படும் பதம்
(1) நஸ்ர் (2) ரஜஸ் (3) நழ்ம் (4) ஸஜஉ (5) மத்ஹ்

● **30** தொடக்கம் **32** வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள A தொடக்கம் H வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருதுக.
A – உளவலுவூட்டல் போதனைகளை செவிமடுத்தல்
B – வீட்டில் ஆன்மீக சூழலை ஏற்படுத்தல்
C – இறையச்சம் எனும் சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளல்
D – குடும்ப உறுப்பினர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறுவதை உறுதிசெய்தல்
E – சமூக கட்டுறவையும், கூட்டுப்பொறுப்பையும் மேம்படுத்தல்
F – குடும்ப உறவுகளின் இன்பதுன்பங்களில் பங்குகொள்ளல்
G – விலங்குகளையும் சமூகப்பிராணிகளாகக் கருதுதல்
H – வளங்களை அனுபவிப்பதில் எல்லையை பேணல்

**30.** உளவியல் ரீதியான பாதிப்புகளிலிருந்து விடுபடுவதற்கான சிறந்த வழிகாட்டல்களாக இஸ்லாம் கூறுவது
(1) A, C, E (2) B, E, [illegible] (3) C, F, H (4) D, F, G (5) E, F, G

**31.** ஒரு முன்மாதிரி முஸ்லிம் குடும்பத்தின் சிறப்பியல்புகள்
(1) A, D, F (2) A, E, F (3) B, C, H (4) B, D, F (5) B, F, G

**32.** புவியில் உள்ள வளங்களை பாதுகாத்தல் பற்றிய வழிகாட்டல்கள்
(1) A, C, D (2) B, D, E (3) C, G, H (4) D, E, F (5) E, G, H

**33.** நீண்டகாலம் முரண்பாட்டுடன் வாழ்ந்து வந்த இரு அரேபிய கோத்திரங்களை நபி (ஸல்) அவர்கள் சமாதானம் செய்து வைத்தார்கள். அக்கோத்திரங்களாவன
(1) பனூ குறைழா - பனூ பக்ர் (2) பனூ நழீர் - பனூ ஹாஷிம்
(3) பனூ அவ்ஸ் - பனூ கஸ்ரஜ் (4) பனூ குறைஷ் - பனூ கைனுகா
(5) பனூ தமீம் - பனூ உமைய்யா

**34.** நஸ்கு, சுலுசி ஆகியன இஸ்லாமிய அழகியற் கலைகளுள் எவ்வகையைச் சார்ந்தது?
(1) கட்டடக் கலை சார்ந்ததாகும். (2) எழுத்தணிக் கலை சார்ந்ததாகும்.
(3) அரபெஸ்க் சார்ந்ததாகும். (4) இசைக் கலை சார்ந்ததாகும்.
(5) சித்திரக் கலை சார்ந்ததாகும்.

**35.** அகபா உடன்படிக்கையின் பிரதான இலக்குகளுள் ஒன்றாகக் கருதப்படுவது
(1) முஸ்லிம்கள் தஞ்சம் கோரலாகும்.
(2) முன்மாதிரி சமூகம் ஒன்றை உருவாக்குதலாகும்.
(3) பொருளாதாரத்தை மேம்படுத்தலாகும்.
(4) மஸ்ஜித் ஒன்றைக் கட்டுவதாகும்.
(5) முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்களை மதீனாவுக்கு அனுப்பிவைப்பதாகும்.

● 36 தொடக்கம் 40 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் X, Y எனும் நிரல்களின் கீழ் தகவல்கள் சில தரப்பட்டுள்ளன. Y நிரலில் உள்ளவை X நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. X நிரலில் உள்ள விடயங்களுக்கேற்ப Y நிரலில் உள்ள விடயங்களை சரியாக ஒழுங்குபடுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானங்களைத் தெரிவுசெய்க.

36.

| | X | Y |
|---|---|---|
| 1. | பஹ்ருல் உலூம் | A. இமாம் இப்னு கஸீர் (ரஹ்) |
| 2. | கராஇபுல் குர்ஆன் | B. இமாம் பஹ்ருத்தீன் அர்ராஸி (ரஹ்) |
| 3. | அல் பஹ்ருல் முஹீத் | C. இமாம் அபூ அல்லையஸ் (ரஹ்) |
| 4. | மபாதிஹுல் கைப் | D. இமாம் அந்நைஸாபூரி (ரஹ்) |
| 5. | தப்ஸீர் குர்ஆனில் அழீம் | E. இமாம் அபூ லைஸ் அஸ்ஸமர்கந்தி (ரஹ்) |

(1) A, B, C, E, D (2) C, B, D, E, A (3) C, D, A, E, B
(4) D, B, C, E, A (5) E, D, C, B, A

37.

| | X | Y |
|---|---|---|
| 1. | இப்ராதுன் நஸ் | A. வாசீப் கலை |
| 2. | இஸ்ராயீலிய்யாத் | B. தப்ஸீர் கலை |
| 3. | இல்முல் ஜர்ஹ் வத்தஃதீல் | C. தெளிவான சட்டத்திலிருந்து பெறப்படும் முடிவு |
| 4. | மன்னர் அக்பர் | D. முகலாயர் ஆட்சி |
| 5. | அவுரங்கசீப் | E. தீனே இலாஹி |

(1) A, B, E, D, C (2) A, C, D, B, E (3) A, C, E, D, B
(4) C, B, A, D, E (5) D, A, E, C, B

38.

| | X | Y |
|---|---|---|
| 1. | கிதாபுல் ஹைவான் | A. வானியல் |
| 2. | அல் - பிரூனி | B. மஸாலிகுல் அப்ஸார் |
| 3. | அல் - இப்லத் | C. கணிதவியல் |
| 4. | அல் - துர்ஆன் | D. மஸாலிக் அஹ்லிய்யா |
| 5. | அல் - குவாரிஸ்மி | E. கியாஸ் |

(1) A, C, B, D, E (2) A, E, B, C, D (3) B, A, E, D, C
(4) B, E, C, A, D (5) D, A, E, B, C

39.

| | X | Y |
|---|---|---|
| 1. | டொலிடோ | A. சட்டத்துறை நூல் |
| 2. | முகத்திமா | B. அல் - அஸ்ஹர் |
| 3. | முஅத்தா | C. கொர்டோவா |
| 4. | ஸ்பெய்ன் | D. கோயா ஜான் |
| 5. | பாதிமிய்யா | E. இப்னு கல்தூன் |

(1) A, D, E, C, B (2) B, A, C, D, E (3) B, A, D, E, C
(4) D, A, C, B, E (5) D, E, A, C, B

**40.**

| | X | Y |
|---|---|---|
| 1. | உஸ்லா | A. இப்றாஹிம் நபியின் மார்க்கத்தை பின்பற்றியோர் |
| 2. | ஹிஜா | B. பாரசீகம் |
| 3. | ஹனீப் | C. குறைஷியர் |
| 4. | மஜூஸியம் | D. கோத்திரங்கள் |
| 5 | கபாஇல் | E. வசைகவி |

(1) C, A, B, D, E (2) C, A, D, B, E (3) C, D, A, E, B
(4) C, E, A, B, D (5) C, E, A, D, B

**41.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - ஜாஹிலிய்யாக் கால இலக்கியங்களை உண்மைப்படுத்துவதற்காகவாகும்.
B - நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தை அமைதிப்படுத்துவதற்காகவாகும்.
C - அரேபியர்களை திருப்திப்படுத்துவதற்காகவாகும்.
D - த.'வாப் பணியை இலகுபடுத்துவதற்காகவாகும்.
E - நடைமுறைப்படுத்தலுக்கு வாய்ப்பளிப்பதற்காகவாகும்.

மேலுள்ளவற்றில் அல்-குர்ஆன் பகுதி பகுதியாக அருளப்பட்டமைக்கான காரணங்களுள் சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, D, E (5) C, D, E

**42.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - ஸகாத் கடமையை மறுத்தவர்களுக்கு எதிராக கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை.
B - கலீபா உமர் (ரழி) தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக பிரகடனப்படுத்தியமை.
C - வாரிசுச் சொத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் பங்குண்டு.
D - இக்கட்டானதோர் சூழலில் அலி (ரழி) அவர்கள் கிலாபத்தை பொறுப்பேற்றமை.
E - கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் இமாம் ஸுஹ்ரி (ரஹ்) அவர்களை ஹதீஸ்களை தொகுக்கும்படி பணித்தமை.

மேலுள்ளவற்றில் மஸ்லஹா முர்ஸலாவுக்கு உதாரணங்களாக கருதத்தக்க மிகப் பொருத்தமான கூற்றுக்களைக் கொண்ட தெரிவு யாது?

(1) A, C, D (2) A, C, E (3) A, D, E (4) B, C, D (5) B, D, E

**43.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - காலம், இடம், நேரம் போன்ற காரணிகளின் தாக்கத்தினால் மாறும் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
B - குறிப்பிட்ட சட்டவிதி நிர்ணயிக்கப்படுவதற்கான உண்மைக் காரணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
C - குறித்த ஒரு விடயத்துக்காக எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றொன்றுக்கும் அமுலாகக்கூடியதாக அமையாதிருத்தல் வேண்டும்.
D - அல்-குர்ஆன், சுன்னா என்பவற்றின் அடியாக அமைந்த சட்டத்தில் நிரந்தரமாக இருத்தல் வேண்டும்.
E - வெளிப்படைத் தன்மையற்றதாக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் இஸ்லாமிய சட்டவாக்கத்தில் இல்லத் பற்றிய மிகப் பொருத்தமான கருத்து

(1) A, B (2) A, D (3) A, E (4) B, C (5) B, D

**44.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - கிரேக்க தத்துவத்தின் தவறுகளை சுட்டிக்காட்டியமை
B - கண்மூடித்தனமான நம்பிக்கைகளை கண்டித்தமை
C - சட்டத்துறை வளர்ச்சிக்கு பங்காற்றியமை
D - அல்-குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கருத்தை எதிர்த்தமை
E - தவறான ஆட்சிமுறைகளை கண்டித்து நல்லாட்சிக்கு வழிகாட்டியமை

மேற்கூறப்பட்ட பணிகளை மேற்கொண்ட இஸ்லாமிய சிந்தனையாளர்

(1) இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்)
(2) இமாம் ஸுயூத்தி (ரஹ்)
(3) இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
(4) இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்)
(5) இமாம் அபூ ஹனீபா (ரஹ்)

**45.** நபி (ஸல்) அவர்களது கால நிருவாக ஒழுங்கில் 'ஸாஹிபுஸ் ஸுக்' எனும் பதவியானது
(1) சகாத் சேகரிப்பவரைக் குறிக்கும்.
(2) சந்தைவரி சேகரிப்பவரைக் குறிக்கும்.
(3) நிலவரி சேகரிப்பவரைக் குறிக்கும்.
(4) திறைசேரிக்கு பொறுப்புக் கூறுபவரைக் குறிக்கும்.
(5) உள்ளூர் விவகார பிரதிநிதியாக செயற்படுபவரைக் குறிக்கும்.

● **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடிகள் பற்றிய மிகப்பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினை பின்வரும் அட்டவணையிலுள்ள **இலக்கம்** (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | மகாஸித் ஷரீஆ என்பது இஸ்லாமிய சட்டங்களின் இலக்கு, அடைவு மற்றும் எதிர்பார்க்கும் விடயங்கள் என பொருள் கொள்ளப்படுகிறது. | தஜ்தீத் என்பது ஒன்றை அகற்றி மற்றொன்றை உருவாக்குவது என்ற கருத்திலன்றி சீர்குலைந்துள்ள ஒன்றை புனரமைப்பதாகும். |
| **47.** | குடும்பத்தில் ஆண் சர்வாதிகாரியாக நடந்து கொள்ள இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை. மாறாக மனைவியுடன் கலந்தாலோசிப்பது அவரது கடமையாகும். | [illegible] (றழி) அவர்கள் மதீனா ஹிஜ்ரத்தின்போது குடும்பத் தலைவியாக நின்று செயற்பட்டார்கள். |
| **48.** | இமாம் அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) அவர்கள் கிரேக்க தத்துவத்தின் தவறுகளை முன்வைப்பதற்காக தஹாபுதுல் பலாஸிபா என்ற நூலை எழுதினார். | இவரது மெய்யியல் தத்துவ சிந்தனைகள் ஐரோப்பாவில் [illegible] போன்றவர்களை மேற்கத்தேய அறிஞர்களின் தோற்றத்துக்கு காரணமாய் அமைந்தன. |
| **49.** | செல்ஜூக்கிய மன்னர் துக்ரில்பேக் கல்வியில் ஆர்வமும் சமய பக்தியும் கொண்டவராகக் காணப்பட்டார். | பாரசீக அமீரின் வழித்தோன்றல்களே செல்ஜூக்கியர்கள் ஆவர். |
| **50.** | நீதிமன்றில் துருக்கித் தொப்பி அணிவதற்காக உரிமைக் குரல் எழுப்பியவர் M.C. அப்துல் காதர் ஆவார். | துருக்கி தொப்பி தொடரான உரிமைப் போராட்டம் சிங்களத் தலைவர்களுடன் இணைந்து சுதந்திரப் போராட்டத்துக்கும் உந்து சக்தியை வழங்கியது. |

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

| විෂයය අංකය பாட இலக்கம் | 47 | විෂයය பாடம் | இஸ்லாமிய நாகரீகம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | ALL | 31. | 4 | 41. | 4 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 1 | 32. | 5 | 42. | 5 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 3 | 33. | 3 | 43. | 4 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 2 | 44. | 1 |
| 05. | 2 | 15. | 4 | 25. | 4 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 4 | 36. | 5 | 46. | 1 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 5 | 37. | 4 | 47. | 3 |
| 08. | 5 | 18. | 5 | 28. | 1 | 38. | 3 | 48. | 2 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 3 | 39. | 5 | 49. | 3 |
| 10. | 4 | 20. | 4 | 30. | 1 | 40. | 4 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்
මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள்:

* பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) நுபுவ்வத்துக்கு முன்னர் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நற்பணிகள் நான்கினை விளக்குக.
   (ii) நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி அருளப்பட்டதன் பின் மனைவி கதீஜா (றழி) அவர்கள் கூறிய ஆறுதல் வார்த்தைகள் யாதெனக் குறிப்பிடுக.
   (iii) அல் - குர்ஆன் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமாகும் என்பதற்கு அல் - குர்ஆனிலிருந்து இரண்டு ஆதாரங்கள் தருக.
   (iv) ரிஸாலத் அவசியம் என்பதற்கான காரணங்கள் நான்கினைத் தருக.
   (v) ஷரீஆ - பிக்ஹ் இரண்டுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை விளக்குக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

2. (i) இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் நான்கினை விளக்குக.
   (ii) முஹாஜிர் - அன்ஸார் உறவை மேம்படுத்துவதற்கு நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கினை விவரிக்குக.
   (iii) அபூபக்கர் ஸித்தீக் (றழி) அவர்கள் முதல் கலீஃபாவாகத் தெரிவு செய்யப்படுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் நான்கினைத் தருக.
   (iv) இஸ்லாமிய சட்டத்துறையில் அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   (v) முஜ்தஹித் ஒருவரிடம் காணப்பட வேண்டிய சிறப்பியல்புகள் நான்கினை விளக்குக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

3. (i) நபி (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத்துக்காக மேற்கொண்ட முன் ஆயத்தங்களை சுருக்கமாக விளக்குக.
   (ii) குலபாஉர் ராஷிதூன் கால ஆட்சியில் நிதி மூலங்களை அதிகரிப்பதற்கு கையாண்ட வழிமுறைகள் பற்றி விவரிக்குக.
   (iii) உமையாக்கள் அரசியல் தலைமைத்துவத்திற்கு வருவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (iv) அப்பாஸியர் கால அறிவியல் துறை வளர்ச்சியில் கலீஃபாக்களின் பங்களிப்புகள் நான்கினை விவரிக்குக.
   (v) இஸ்லாமிய வரலாற்றில் சிற்றரசுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் நான்கினை விளக்குக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக.
   (ii) இஸ்லாமிய நாகரிகம், ஏனைய நாகரிகங்களிலிருந்து வேறுபடும் விதத்தினை விவரிக்குக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

5. (i) இஸ்லாமிய சமூக உருவாக்கத்தில் மதீனா சாசனம் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
   (ii) கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மதிப்பீடு செய்க.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

6. (i) பல்லின சமூக உறவில் சகவாழ்வைப் பேணுவதில் ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் யாதென தெளிவுபடுத்துக.
   (ii) பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள கௌரவத்தை ஜாஹிலிய்யா சமூகத்திலிருந்து வேறுபடும் விதத்தினை விளக்குக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

7. (i) இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தும் வரலாற்றுத் தகவல்களை ஆதாரங்களுடன் விவரிக்குக.
   (ii) கி.பி 12 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களின் அரசவையில் முஸ்லிம் பிரமுகர்கள் பெற்றிருந்த செல்வாக்குகளை விளக்குக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

8. (i) கலீபா ஹாரூன் அல் ரஷீத் அவர்களின் அரசியல் பணிகளை மதிப்பீடு செய்க.
   (ii) ஹதீஸ்களை பாதுகாப்பதற்கு அத்துறைசார்ந்த இமாம்கள் கையாண்ட வழிமுறைகளை விளக்குக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

# பகுதி 1

**வினா இல: 01**

**i. நுபுவ்வத்துக்கு முன்னர் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நற்பணிகள் நான்கினை விளக்குக.**

- ஹில்புல் புழூல் – எனும் சமூக அமைப்பை உருவாக்கி வழி நடாத்தியமை.
- இளம் பருவத்தில் குறைஷியரோடு சேர்ந்து சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை (ஹர்புல் புஜ்ஜார்).
- கஃபா புனரமைப்பின் போது நடுவராகச் செயற்பட்டமை.
- 'ஹஜருல் அஸ்வத்' கல்லை உரிய இடத்தில பதிப்பதற்கு சிறந்ததொரு நடுவராகச் செயற்பட்டமை.
- பிறருக்கு உதவியாக நடந்து கொண்டமை (அடைக்கலப் பொருட்களை பாதுகாத்துக் கொடுத்தமை)
- நற்பணிகள் மேற்கொள்ளப்பட்டமையால் அல்-அமீன், அஸ்-ஸாதிக் எனும் பெயர்களால் கௌரவிக்கப்பட்டமை.
- தொழில் ரீதியாக ஆடு மேய்த்தலிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டமை.

**(இவை போன்ற 04 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகள்)**

**ii. நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி அருளப்பட்டதன் பின் மனைவி கதீஜா (ரழி) அவர்கள் கூறிய ஆறுதல் வார்த்தைகள் யாதெனக் குறிப்பிடுக.**

- அல்லாஹ்வின் மீதாணையாக உங்களை ஒருபோதும் அல்லாஹ் இழிவுபடுத்த மாட்டான். ஏனெனில், நீங்கள் உறவுகளைப் சேர்ந்து நடந்துகொள்கிறீர்கள். உண்மையே பேசுகின்றீர்கள். (சிரமப்படுவோரின்) சிரமங்களை தாங்கிக்கொள்கின்றீர்கள். வறியோருக்கு உதவுகிறீர்கள். விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள். அநீதிக்கு எதிராக பாடுபடுகிறீர்கள். (புஹாரி)

**(இக்கருத்துக்கள் புலப்படும் வகையில் எழுதியிருப்பின் 04 புள்ளிகள்)**

**iii. அல்-குர்ஆன் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமாகும் என்பதற்கு அல்-குர்ஆனிலிருந்து இரண்டு ஆதாரங்கள் தருக.**

- "நிச்சயமாக நாம் தான் இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்தோம். நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலர்களாவோம்" (15 : 09)
- "அவர்கள் இந்தக் குர்ஆனை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து வந்திருந்தால் இதில் அதிகமான முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்" (04 : 82)

**(இரண்டு அல்-குர்ஆன் வசனங்கள் தெளிவாக எழுதியிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள்)**

**iv. ரிஸாலத் அவசியம் என்பதற்கான காரணங்கள் நான்கினைத் தருக.**

- மனிதப் புலனறிவும், பகுத்தறிவும் புரிந்து கொள்ள முடியாத விடயங்களை அறிவதற்கு.
- மனிதன் இவ்வுலகில் நேர்வழியைப் பெறுவதற்கு.
- அல்லாஹ், மறுமை பற்றிய ஆழமான அறிவைப் பெறுவதற்கு
- வாழ்வின் இலக்கு, நன்மை தீமை பற்றிய அறிவு, மனிதனின் ஆன்மீக, லௌகீகத் தேவை, மறுமை வாழ்வு பற்றிய விளக்கம் முதலியவற்றை விளங்கிக் கொள்வதற்கு.
- மறைவானவை பற்றிய அறிவு மனிதனுக்கு கிடையாது. அதனை அல்லாஹ்விடமிருந்து மட்டுமே பெற முடியும் அதற்கு ரிஸாலத் துணையாக அமையும்.
- முஸ்லிமைப் பொறுத்தவரை தன்னைப் படைத்தவன் உட்பட அனைத்து விடயங்களையும் அறிந்துகொள்வதற்கு ரிஸாலத் துணை புரியும்.

**(இவை போன்ற 4 காரணங்கள் குறிப்பிட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகள்)**

**v. ஷரீஆ-பிக்ஹ் இரண்டுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை விளக்குக.**

| **ஷரீஆ** | **பிக்ஹ்** |
|---|---|
| • பொதுவானதும், முழுமையானதும் | • குறிப்பானதும், குறுகியதும் |
| • அல்-குர்ஆன் ஸுன்னாவுடன் நேரடித் தொடர்புபட்ட சட்டங்கள் | • துணை மூலாதாரங்களுடன் தொடர்பு கொண்டது. |
| • மனித கருத்துக்கு இடமில்லை | • இஜ்திஹாதிற்கு இடமுண்டு |

**(இவைபோன்ற இரண்டு வேறுபாடுகள் குறிப்பிட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள்)**

**(4x5=20 புள்ளிகள்)**

**வினா இல: 02**

**i. இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் நான்கினை விளக்குக.**

- தௌஹீதை அடிப்படையாகக் கொண்டது / தெய்வீகத் தன்மை கொண்டது (ரப்பானிய்யா).
- பூரணத்துவம் வாய்ந்தது (ஷுமூலிய்யா).
- நடுநிலைத் தன்மை கொண்டது (வஸதிய்யா).
- சர்வதேசமயமானது (ஆலமிய்யா).
- பொதுத்தன்மை கொண்டது (உமூமிய்யா).
- நடைமுறைச் சாத்தியமானது (அல்-வாக்கிஇய்யா).
- நெகிழும் தன்மை - நெகிழாத் தன்மை கொண்டது (அஸ்-ஸபாத் வல்-முரூனா).

**(இவை போன்ற 04 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகள்)**

**ii. முஹாஜிர் - அன்ஸார் உறவை மேம்படுத்துவதற்கு நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கினை விவரிக்குக.**

- இரத்த உறவுக்கு அப்பாற்பட்ட உறவொன்றை அறிமுகம் செய்தமை.
- முஹாஜிர்-அன்ஸார்களுக்கு இடையில் சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தியமை (சொத்துப் பங்கீடு, திருமணம், தொழில், இருப்பிடம் ).
- பொருத்தப்பாட்டுடன் கூடிய சகோதரத்துவப் பிணைப்பு.
- இரு சாராரும் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள நபியவர்கள் வழி காட்டியமை.

**(இவை போன்ற 4 கருத்துக்கள் விவரிக்கப்பட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகள்)**

**iii. அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள் முதல் கலீபாவாக தெரிவு செய்யப்படுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் நான்கினைத் தருக.**

- அபூபக்கர் (ரழி) அவர்கள் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றவராகவும், நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய நண்பராகவும், உறவினராகவும், குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவராகவும் காணப்பட்டமை.
- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பல விடயங்களில் அபூபக்கர (ரழி) அவர்களை முதன்மைப்படுத்தியமை:
    - நபி (ஸல்) அவர்கள் நோயுற்றபோது, தொழுகை நடாத்த பணித்தமை.
    - மதீனா ஹிஜ்ரத் பயணத்துணையாக இருந்தமை.
    - ஹிஜ்ரி 09 இல் ஹஜ்ஜுக்கு தலைமைதாங்கிச் சென்றமை.

- ○ நபி (ஸல்) அவர்கள் நோய்யுற்ற பொழுது அபூபக்கர் (ரழி) அவர்களின் வீட்டுத் திசையிலுள்ள வாயிலை மாத்திரம் திறந்து வைக்குமாறு கூறியமை.
- அபூபக்கர் (ரழி) அவர்கள் தலைமைத்துவத்திற்கு மிகவும் பொருத்தமானவராகக் காணப்பட்டமை.
- நபி (ஸல்) அவர்களின்இஸ்ரா, மிஃராஜ் பயணத்தை உண்மைப்படுத்தியமை.
- நபியவர்களின் வபாத்தை அடுத்து சமூக நிலையைத் தோற்றுவித்தமை.

**(இவை போன்ற 4 காரணங்கள் குறிப்பிட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகள்)**

**iv. இஸ்லாமிய சட்டத்துறையில் அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- ஒரு ஹதீஸை உறுதிப்படுத்துவதற்கு முன்வைக்கும் ஆதாரங்களில் எழும் கருத்து வேறுபாடு
- ஒரு ஹதீஸை விளங்கிக் கொள்வதில் முஜ்தஹித்களுக்கு மத்தியில் ஏற்படும் கருத்து வேறுபாடு
- முரண்பாடான சட்ட வசனங்களுக்கு இடையில் இணக்கம் காண்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் கருத்து வேறுபாடு
- சட்ட மூலாதார அடிப்படை விதிகளை விளக்குவதில் ஏற்படும் கருத்து வேறுபாடு
- சட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் கருத்து வேறுபாடு

**(இவை போன்ற 4 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகள்)**

**v. முஜ்தஹித் ஒருவரிடம் காணப்பட வேண்டிய சிறப்பியல்புகள் நான்கினை விளக்குக.**

- இஸ்லாம் பற்றிய அறிவும், தெளிவும்
- இஜ்திஹாதை மேற்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளமை.
- தெளிந்த உள்ளம்
- தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்கான மனோவலிமை
- பக்கச்சார்பற்ற சிந்தனைப் போக்கு
- அசத்தியத்தில் இருந்து சத்தியத்தைப பிரித்தெடுக்கும் ஆற்றல்

**(இவை போன்ற 04 சிறப்பியல்புகள் விளக்கியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**(4x×5=20 புள்ளிகள்)**

**வினா இல: 03**

**i. நபி (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத்துக்காக மேற்கொண்ட முன் ஆயத்தங்களை சுருக்கமாக விளக்குக.**

- நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சமூக அமைப்பொன்றை உருவாக்குவதற்காக பொருத்தமான இடங்களைத் தேடியமை.
- அகபா உடன்படிக்கை மூலம் மதீனாவில் சாதகமான சூழலை ஏற்படுத்தியமை.
- முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்களை மதீனாவுக்கு அனுப்பி வைத்தமை.
- பயண ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறு அபூபக்கர் (ரழி) அவர்களைப் பணித்தமை.
- நபி (ஸல்) அவர்கள் ஏற்கனவே ஸஹாபாக்களை மக்காவிலிருந்து சிறு குழுக்களாக அனுப்பி வைத்தமை.
- குறைஷியர்களின் அடைக்கலப் பொருட்களை ஒப்படைப்பதற்கு அலி (ரழி) அவர்களை நியமித்தமை.
- மதீனா சென்றடைய முஸ்லிம் அல்லாத வழிகாட்டியையும், வழமைக்கு மாற்றமான பாதையையும் தெரிவு செய்தமை.
- அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்திருநதமை.

**(இவை போன்ற 06 ஆயத்தங்கள் சுருக்கமாக விளக்கியிருப்பின் 4 புள்ளிகள்)**

**ii. குபைாஉர் ராஷிதூன் கால ஆட்சியில் நிதி மூலங்களை அதிகரிப்பதற்கு கையாண்ட வழிமுறைகள் பற்றி விவரிக்குக.**

- கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் 'பைதுல் மால்' நிறுவனமயப்படுத்தப்பட்டமை.
- 'ஸகாத்' பரவலாக்கம் செய்யப்பட்டமை.
- விவசாய மேம்பாட்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகம் செய்தமை.
- பைதுல் மால் மூலம் நிதி மூலங்களை அதிகரித்தமை (வரி வசூலிப்பு)
- வியாபார அபிவிருத்தியினூடாக நாட்டின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை.

**(இவை போன்ற 04 வழிமுறைகள் விபரித்திருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**iii. உமையாக்கள் அரசியல் தலைமைத்துவத்திற்கு வருவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- உமையாக்கள் அரசியல் பின்னணியுள்ள குடும்பங்களிலிருந்து தோன்றியமை.
- குலபாஉர் ராஷிதூன்கள் பிற்பட்ட காலங்களில் எதிர்நோக்கிய அரசியல் சவால்கள்.
- கிலாபத் - தலைமைத்துவம் பற்றிய முரண்பட்ட கருத்துகள்
- அரசியல் போராட்டங்கள்.
- குலபாஉர் ராஷிதூன்களின் பிற்பட்ட அரசியல் கள நிலவரம் உமையா ஆட்சிக்கு சாதகமாக அமைந்தமை.
- குலபாஉர் ராஷிதூன்களின் கிலாபத் வீழ்ச்சி - உமையாக்களின் கிலாபத் எழுச்சி

**(இவை போன்ற 04 காரணிகள் குறிப்பிட்டிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**iv. அப்பாஸியர் கால அறிவியல் துறை வளர்ச்சியில் கலீபாக்களின் பங்களிப்புகள் நான்கினை விவரிக்குக.**

- கலீபா அல் மன்சூர் தாருல் ஹிக்மா எனும் அறிவகத்தைத் தோற்றுவித்தமை
- கலீபா ஹாரூன் அர் ரஷீத் பைதுல் ஹிக்மாவை விரிவு படுத்தியமை
- கலீபா மாஃமூன் பைதுல் ஹிக்மாவை பல் துறைகளாகப் பிரித்து விரிவு படுத்தியமை.
- கலீபா மாஃமூன் மொழிபெயர்ப்பு, ஆய்வு மையங்களை தோற்றுவித்து வெளிநாட்டு அறிஞர்களையும் நூல்களையும் வரவழைத்து அத்துறையை விரிவுபடுத்தியமை.

**(இவை போன்ற 04 கருத்துக்கள் விபரித்திருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**v. இஸ்லாமிய வரலாற்றில் சிற்றரசுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் நான்கினை விளக்குக.**

- பின்வந்த ஆட்சியாளர்களின் பலவீனம்.
- ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான அதிகாரப் போட்டி.
- இன வாதம், பிரதேச வாதம் தலைதூக்கியமை.
- மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பிலிருந்து நில ரீதியாக தூரமாகியமை.
- இனக் குழுக்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பிரதேசங்கள் சுய ஆட்சியை அமைத்தமை.
- தத்தமது பிரதேசங்களில் ஆளுநர்களின் மேலாதிக்கம்.

**(இவை போன்ற 04 காரணங்கள் விளக்கியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**(4×5=20 புள்ளிகள்)**

# பகுதி II

**வினா இல: 04**

**i. பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக.**

- அறிமுகம் - பத விளக்கத்துடன்.
- பிரபஞ்சம் பற்றி பிற நாகரிகங்கள், கொள்கைகள் முன்வைக்கும் கருத்துக்களைக் குறிப்பிடல்.
- பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமியக் கருத்துக்கள் - பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ், அதன் சொந்தக்காரன் 'அல்லாஹ்', அதன் அதிகாரியும் 'அல்லாஹ்'
- பிரபஞ்சமும் அதிலுள்ளவையும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளமை.
- பிரபஞ்சம் அல்லாஹ்வின் திட்டமிடலின் அடிப்படையில் இயங்குகின்றமை.
- பிரபஞ்சத்திற்கு ஆரம்பமும், முடிவுமுண்டு.
- பிரபஞ்சத்தின் தோற்றமும், இயக்கமும் தற்செயல் நிகழ்வன்று மாறாக அல்லாஹ்வினால் திட்டமிடப்பட்ட சீரிய ஒழுங்கமைப்பைக் கொண்டவை.
- அல்லாஹ் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதியை (தக்தீர்) ஏற்படுத்தியுள்ளமை.
- ஏனைய நாகரிகங்கள் குறிப்பிடுவதுபோல் இப்பிரபஞ்சம் தற்செயலாக உருவானதல்ல.

**அறிமுகம் - 02 புள்ளிகள்**

**பிற நாகரிகங்களோடு ஒப்பீட்டிருப்பின் - 02**

**(இவை போன்ற இஸ்லாமியக் கண்ணோட்டங்கள் தொடர்பில் 06 விடயங்களை**

**தெளிவுபடுத்தியிருப்பின் (1 x6) 6 புள்ளிகள்)**

**மொத்தப் புள்ளிகள்- 10**

**ii. இஸ்லாமிய நாகரிகம், ஏனைய நாகரிகங்களிலிருந்து வேறுபடும் விதத்தினை விவரிக்குக.**

நாகரிகம் பற்றிய அறிமுகம்

| இஸ்லாமிய நாகரிகம் | பிற நாகரிகங்கள் |
|---|---|
| ஓரிறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டமை. | நாஸ்திகம், பல தெய்வக் கொள்கையை அடிப்படைகளாகக் கொண்டுள்ளமை. |
| வஹி - இறை வழிகாட்டலைக் கொண்டமை. | திரிபுபடுத்தப்பட்ட போதனைகளையும், மனிதன் வகுத்துக் கொண்ட வழிகாட்டல்களையும் கொண்டுள்ளமை. |
| அடிப்படை மூலாதாரங்களையும், துணை மூலாதாரங்களையும் கொண்டுள்ளமை. | மனோஇச்சையின் பிரகாரம் அமைந்த கொள்கைகளைக் கொண்டுள்ளமை. |

| | |
|---|---|
| சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உள்ளமை. | சட்டமியற்றும் அதிகாரத்தை மனிதன் தன் வயப்படுத்திக் கொண்டுள்ளமை. |
| இம்மையையும், மறுமையையும் இலக்காகக் கொண்டமை. | இம்மையை மட்டும் இலக்காகக் கொண்டமை. |
| உலகியலை மறுமைக்காகப் பயன்படுத்துமாறு தூண்டுகின்றமை. | உலக வாழ்வைப் பூரணமாக அனுபவிக்க வேண்டும் எனும் மனப்பாங்குடையமை. |
| இறை திருப்தியை இலக்காகக் கொண்டுள்ளமை. | மனிதத் திருப்தியை இலக்காகக் கொண்டுள்ளமை. |
| சுவனத்தை இலக்காகக் கொண்டுள்ளமை. | உலக இன்பங்களை இலக்காகக் கொண்டுள்ளமை. |
| மனிதனை உயர்வாக மதிக்கின்றமை. | மனிதனை அற்பமாகக் கருதுகின்றமை. |
| மனிதனது பொது நலனைக் கருத்திற் கொண்டுள்ளமை. | சுயநலத்தைக் கருத்தில் கொண்டுள்ளமை. |

**நாகரிகம் தொடர்பான அறிமுகம் 01 புள்ளி**

**(விடயங்களை ஒப்பிடப்பட்டிருப்பின் 09 புள்ளிகள்)**

**மொத்தப் புள்ளிகள் - 10**

வினா இல: 05

i. **இஸ்லாமிய சமூக உருவாக்கத்தில் மதீனா சாசனம் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.**

- மதீனா சாசனம் பற்றிய அறிமுகம்
- உலகில் வரையப்பட்ட முதலாவது சமூக ஒப்பந்தம்
- சமூக ஒற்றுமை நிலை நாட்டப்பட்டமை
- மதீனா சமூகத்தை ஒரே தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவந்தமை (நபியவர்களின் தலைமைத்துவம்).
- பாதுகாப்புக்கான உத்தரவாதம்.
- மஸ்ஜிதுந் நபவி சமூகத்தின் மத்திய தளமாக இயங்கியமை
- இஸ்லாமிய அரசு உருவாகுவதற்கு இவ்வொப்பந்தம் வழியமைத்தமை.
- இஸ்லாம் அல்லாத ஏனைய கொள்கைகள், கோட்பாடுகள் களையப்படுவதற்கு இவ்வொப்பந்தம் வித்திட்டமை

**அறிமுகம் -02 புள்ளிகள்**

**(இவை போன்ற 06 முக்கியத்துவங்கள் விளக்கியிருப்பின் $1\frac{1}{2} \times 6 = 8$ புள்ளிகள்)**

**மொத்தப் புள்ளிகள் -10**

**ii. கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மதிப்பீடு செய்க.**

அறிமுகம் குறிப்பிடல்: கலீபா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மூலம் கிலாபத்தை பலவீனப்படுத்தி குழப்பங்களையும், ஆட்சி மாற்றங்களையும் ஏற்படுத்துவது கலகக்காரர்களின் நோக்கமாகக் காணப்பட்டது.

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள்:

- குடும்பத்தினருக்கு உயர் பதவிகளை வழங்கியமை.
- மஸ்ஜிதுந் நபவியில் மிம்பர் மேடையை உயர்த்திக் கட்டியமை.
- பதக் எனும் தோட்டத்தை மேச்சலுக்காக திறந்துவிட்டமை.
- தனது காலத்திற்கு முன்னர் எழுதப்பட்டு பாவனையிலிருந்த அல்-குர்ஆன் பிரதிகளை பாவனையிலிருந்து நீக்கியமை.
- அபூதர் அல்-கிபாரி (ரழி) அவர்களை நாடு கடத்தியமை.
- எகிப்தில் இருந்து வந்த தூதுக் குழுவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாக குற்றம் சுமத்தியமை.
- அரச பதவிகளின் போது ஹாஷிமிக்கள், அன்சாரிகள் புறக்கணிக்கப்பட்டமை.

**அறிமுகம் - 02 புள்ளிகள்**

**குற்றச்சாட்டுக்கள் 04 இனைக் குறிப்பிட்டு,**
**அவற்றை மதிப்பீடு செய்திருப்பின் (4 x 2) 08 புள்ளிகள்**
**(10×2= 20 புள்ளிகள்)**

**வினா இல: 08**

**i. பல்லின சமூக உறவில் சகவாழ்வைப் பேணுவதில் ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் யாதென தெளிவுபடுத்துக.**

- சகலரையும் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினர் என நோக்குதல்
- பிற சமயத்தாரின் இன்ப துன்பங்களில் பங்கேற்றல்.
- முஸ்லிம்களாகிய எமது கொண்டாட்டங்கள், நிகழ்வுகளில் பிற மத சகோதரர்களை கலந்து கொள்ள அழைத்தல் - உபசரித்தல்.
- நாட்டிலுள்ள வைத்திய சாலைகள், பாடசாலைகள் போன்ற பொதுவான நிறுவனங்களுக்கு உதவுதல்.
- சிரமதானங்கள், இரத்ததான நிகழ்வுகள், மருத்துவ முகாம்களை இனபேதம் பாராது நடாத்துதல்.
- அனர்த்தங்களின் போது மனித நேயத்துடன் உதவுதல், நிவாரண உதவிகளை வழங்குதல், அவற்றில் பங்கேற்றல்.
- சூழல் - சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள்,
- போதைப் பொருள் ஒழிப்பு, சமூக விரோதச் செயல்கள் ஒழித்தல் முதலான பொது வேலைத் திட்டங்களில் பங்கேற்றல்.

- விழாக்கள், வைபவங்கள், பொது இடங்களில் எளிமையைக் கடைப் பிடித்தல் மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாதவாறு நடந்து கொள்ளல்.
- எல்லா வேளைகளிலும் தேசியப் பற்றை வெளிப்படுத்தும் வகையில் பிரதேச, தேசிய நலனை நோக்காகக் கொண்டு ஈடுபாட்டுடன் உழைத்தல்.
- சமய நிறுவனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்சிகளை ஒழுங்கமைத்தல்.

**(இவை போன்ற 10 வழிமுறைக்கள் தெளிவுபடுத்திருப்பின் (10×1) 10 புள்ளிகள்)**

**ii. பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள கௌரவத்தை ஜாஹிலிய்யா சமூகத்திலிருந்து வேறுபடும் விதத்தினை விளக்குக.**

**அறிமுகம்**

| ஜாஹிலிய்யக் கால பெண்கள் | இஸ்லாமியப் பெண்கள் |
|---|---|
| • பாதுகாப்பின்மை. | • மனிதப் பிறவியாகக் கருதியமை. |
| • அடிமைத்துவம். | • சுதந்திரம். |
| • கல்வி உரிமை இன்மை. | • கல்வியை முக்கியத்துவப் படுத்தியமை. |
| • சம அந்தஸ்து இன்மை. | • சமத்துவம், நீதி. |
| • பொருளாதார உரிமை இன்மை. | • பெருளீட்டல் உரிமை வழங்கப்பட்டுள்ளமை. |
| • குடும்ப அந்தஸ்து இழக்கப்பட்டமை. | • குடும்ப அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளமை. |
| • சொத்துரிமை வழங்கப்படாமை. | • சொத்துரிமை வழங்கப்பட்டுள்ளமை. |
| • போகப் பொருளாக பார்க்கப்பட்டமை. | • ஈமானியப் பெண்களாக மதிக்கின்றமை. |

**அறிமுகம் - 02 புள்ளிகள்**

**(அறிமுகத்துடன் 04 விடயங்கள் வேறுபடுத்திக் காட்டியிருப்பின் (4×2) 08 புள்ளிகள்)**

**(10×2= 20 புள்ளிகள்)**

**வினா இல: 07**

**i. இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தும் வரலாற்றுத் தகவல்களை ஆதாரங்களுடன் விவரிக்குக.**

- வர்த்தகர்களாக வருகை தந்த அரேபியர்கள் இஸ்லாம் அறிமுகமான பின் முஸ்லிம் அரேபிய வர்த்தகர்களாக வருகை தந்தமை. உதாரணம் - வர்த்தக நேக்கம், பாவாத மலை தரிசித்தல் - ஆதாரங்களுடன் விவரிக்குக.

- சமயப் போதகர்களின் வருகை
  - வஹப் இப்னு அபீ கப்ஸா (ரழி) அவர்களின் வருகை
    - ➢ நபி (ஸல்) அவர்கள் இலங்கை அரசனிடத்தில் அனுப்பியதான கருத்து - M.C. சித்தி லெப்பை - ஹுஸைன் இப்னு முஹம்மத் என்பவர் கோவை செய்த 'அல்கியா பாக்கரி' எனும் நூலின் முதலாம் பாகத்தின் 184 ஆம் பக்கதிலிருந்து பெற்றுக் கொண்டதாக ஆதாரம் காட்டி முஸ்லிம் நேசனில்
    - ➢ நபி (ஸல்) அவர்கள் சீனாவுக்கு அனுப்பியபோது இலங்கையில் தங்கிச் சென்றமை - மார்சல் புரூம் ஹால் சீனாவில் இஸ்லாம்' எனும் நூலில் வஹப் இப்னு அபீ கப்ஷா பற்றி குறிப்பிடும் ஆதாரம்.
    - ➢ வஹப் இப்னு அபீ கப்ஷா பற்றி சேர் தோமஸ் ஆர்னல்ட் தனது The Preaching of Islam எனும் நூலின் முதற் பதிப்பில் குறிப்பிடுவதாக கலாநிதி ஹமீதுல்லாஹ் தனது Foreign Relations of the Prophet Muhamad எனும் நூலில் குறிப்பிடும் ஆதாரம்.

- உமையாக்கள் காலப்பிரிவில் இடம்பெற்ற ஹாஷிமியர்களின் இலங்கைக்கான வருகை:
  - வரலாற்றாசிரியர் ஸேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் தனது 'Ceylon' எனும் நூலில், தரும் கருத்து
  - வரலாற்றாசிரியர் அல்-பலாதுரி 'புதூஹுல் புல்தான்' எனும் நூலில் குறிப்பிடும் சிந்து நோக்கிய படையெடுப்புக்கான பின்னணி.

- மன்னன் மூன்றாம் அக்கபோதியின் தூதுவர்:

  'அஜாஇபுல் ஹிந்து' எனும் நூல் தரும் தகவல்:

  இத்தகவலை கலாநிதி சிறிமா கிரிபமுன Muslims of Sri Lanka Avenues to Antiquity எனும் நூலில் சுட்டிக்காட்டுகிறார்.

- இலங்கை வரலாறு குறித்து இலங்கை வரலாற்று ஆய்வாளர்கள் முன்வைக்கும் கருத்துக்கள்:

  கலாநிதி எம்.ஏ.எம். ஷுக்ரி, கலாநிதி எம்.ஐ.எம். அமீன், கலாநிதி லோனா தேவராஜா, பேராசிரியர் சிறிமா கிரிபமுன, பேராசிரியர் ராஜ் சோம் தேவ், பேராசிரியர் ரோஹித தசனாயக

- அறபுத் தேச பிரயாணிகளின் குறிப்புக்கள்:

  மஸ்ஊதி (கி.பி. 955), அல்-பிரூனி (கி.பி. 973), அல்-இத்ரீஸி (கி.பி. 1165), கஸ்வீனி (கி.பி. 1203) மற்றும் இப்னு பதூதா (கி.பி. 1344) போன்றோரின் வரலாற்றுக் குறிப்புகள்.

- கண்டெடுக்கப்பட்ட அறபுச் சிலாசங்கள் - கல்லறை நடு கற்கள் – (Tombs - மீசான் கம்பு).
- நாட்டின் சில பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட அறபு நாணயங்கள் / புதையல்கள்.
- வரலாற்றுத் தொன்மை கொண்ட மஸ்ஜித்களும், நினைவுத் தூபிகளும் (கல்லறைகள்).
- முஸ்லிம்களிடையே வாய் வழியாகச் கூறப்பட்டுவரும் மரபு வழிச் செய்திகள்.
- சிங்கள மன்னர்களுடன் இருந்த முஸ்லிம்களின் நெருக்கமான உறவும், மன்னர்களால் வழங்கப்பட்ட காணிப்பத்திரங்களும் முஸ்லிம்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்துகின்றன.

**(05 வரலாற்றுத் தகவல்கள் ஆதாரங்களுடன் குறிப்பிட்டிருப்பின் (5×2) 10 புள்ளிகள்)**

**ii. கி.பி 12 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களின் அரசவையில் முஸ்லிம் பிரமுகர்கள் பெற்றிருந்த செல்வாக்குகளை விளக்குக.**

- அரச மாளிகைகளில் முஸ்லிம்கள் முக்கியத்துவம் பெற்றமை: சமையல், பாதுகாப்பு, மருத்துவம்
- சிங்கள மன்னர்களின் வெளிநாட்டு தூதுவர்களாகவும் முஸ்லிம்கள் கடமையாற்றியமை. (அபூ உஸ்மான்)
- வைத்திய சேவையில் முஸ்லிம் வைத்தியர்கள் கடமையாற்றியமை.
- முஸ்லிம்கள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டமை (தவளம்)
- அரச நிர்வாகத்தில் முஸ்லிம்கள் பங்கு கொண்டிருந்தமை.
- அரச சபையில் முஸ்லிம்கள் இடம்பெற்றமை.
- சேவைகளுக்குப் பகரமாக காணிகள் வழங்கப்பட்டமை.
- பாதுகாப்பு ஊழியர்களாக செயல்பட்டமை.
- பொருளாதார மேம்பாட்டுக்காக பங்காற்றியமை.
- அரச ஆலோசகர்களாக செயற்பட்டமை.

**(இவை போன்ற 05 செல்வாக்குகள் தெளிவுபடுத்திருப்பின் (5×2) 10 புள்ளிகள்)**


Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

**வினா இல: 08**

**i. கலீபா ஹாரூன் அல் ரஷீத் அவர்களின் அரசியல் பணிகளை மதிப்பீடு செய்க.**

- கலீபா ஹாரூன் அல் ரஷீத் பற்றிய அறிமுகம்.
- அரசியல், கல்வி, இலக்கியம், மொழி போன்ற பல துறைகளில் செல்வாக்கு செலுத்தியவர்.
- அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களை அரச பதவிகளில் அமர்த்தியமை (பர்மகி குடும்பம்).
- நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தியமை.
- உள்நாட்டு குழப்பங்களை அடக்கி சீர்படுத்தியமை.
- சாம்ராஜ்ஜியத்தின் சகல துறைகளிலும் அபிவிருத்தியை மேற்கொண்டமை.
- யஹ்யா பர்மகியை பிரதம அமைச்சராக நியமித்தமை.
- அப்பாஸிய ஆட்சியின் பொற்காலம்.

**(அறிமுகத்துடன் 05 விடயங்கள் விளக்கியிருப்பின் 10 புள்ளிகள்)**

**ii. ஹதீஸ்களை பாதுகாப்பதற்கு அத்துறைசார்ந்த இமாம்கள் கையாண்ட வழிமுறைகளை விளக்குக.**

- ஹதீஸ் துறை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட கால கட்டங்களைக் குறிப்பிடல் வேண்டும் (நபியவர்கள் காலம், ஸஹாபாக்கள் காலம், தாபிஈக்கள், தபஉத் தாபிஈக்கள் காலம்)
- இக்காலங்களில் பாதுகாப்பு, சேகரிப்பு, தொகுப்பு, பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- மௌழுஆத்களிலிருந்து ஸஹீஹான ஹதீஸ்களைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சிகளைக் குறிப்பிடல்.
- உதாரணம் - அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத் தஃதீல், உஸூலுல் ஹதீஸ்,
- இக்கலைகளை அடிப்படையாகக் கொண்டு ஹதீஸ்கள் தரம் பிரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டமை.
- ஸிஹாஹுஸ் ஸித்தா தொகுப்புக்களின் பங்களிப்பு

**(இக்கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் (5×2) 10 புள்ளிகள்)**

****

PAST PAPERS WIKI
(27) www.PastPapers.WiKi (27)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA